# மீன்பிடிக் கிராமத்தில் ராணுவம் வன்முறை
# 35 தமிழர் படுகொலை; வீடுகள் எரிப்பு

நேற்று முன்தினமிரவு மட்டக்களப்பு மாவட்டம் தளவாய்ப்பகுதியில் 35 தமிழர்கள் ராணுவத்தினராலும் முஸ்லிம் ஊர்காவற்படையினராலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். நேற்று முன்தினமிரவு ஒன்பது மணியளவில் மேற்படி மீன்பிடிக் கிராமத்துள் புகுந்த ராணுவத்தினரும் இருபது முஸ்லிம் ஊர்காவற்படையினரும் இப்பகுதியில் இருந்து 35 தமிழர்களைப் பிடித்துச்சென்று அருகில் உள்ள கடற்கரையில் வைத்து சுட்டுக்கொன்றனர். இதன் பின்னர் இக்கிராமத்தில் ஐந்து வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் வலைகள், வள்ளங்களும் சேதமாக்கப்பட்டன. இச்சம்பவத்தை அரசாங்கம் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் இடம் பெற்ற மோதல் என்றும் ஆறு பெண்கள் உட்பட 12 பேர் மரணமானதாகவும் பத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும் அறிவித்தது. (து)


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:-3-50

முரசொலி

முரசு 04 ஒலி 222 ஞாயிறு 23-09-1990 (புரட்டாதி 07) ற.அவ்வல் 03


# யாழ். நகரில் நேற்று முழுவதும்
# பொம்மர்கள் கடும் தாக்குதல்

## 6 பேர் பலி; பலர் படுகாயம்

நீண்ட நாட்களுக்குப் பின்னர் நேற்று முழுவதும் நகரின் பல்வேறு இடங்களில் பொம்மர்கள் பலத்த தாக்குதல்களை நடாத்தின. இதனால் ஆறு பேர் வரை கொல்லப்பட்டனர். வீடுகள் கட்டிடங்கள் பலத்த சேதமடைந்தன.

### இந்துக்கல்லூரி தாக்கு; விடுதிச்சாலை சேதமுற்றது

யாழ். இந்துக்கல்லூரிப் பகுதியில் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் இந்துக் கல்லூரியின் புதிய விடுதிச்சாலை சேதமுற்றுள்ளது.

நேற்றுக்காலை 10 20 மணி போல் இத்தாக்குதல் நிகழ்ந்த இடத்திலிருந்து 100 யார் தூரத்திலிருந்த கல்லூரி அதிபரும், பதில் அதிபரும், சில ஆசிரியர்களும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

அச்சமயம் பாடசாலையில் நவராத்திரி பூசை இடம் பெற்றுக் கொண்டிருந்தது. குண்டுச் சிதறல்களினால் சிறுவன் ஒருவன் காயமடைய நேர்ந்தது.

மற்றொரு குண்டு விளையாட்டு மைதானத்தில் விழுந்து வெடித்ததினால் அங்கு நின்ற மாடு ஒன்று பலியானது. (72கி)

### விநாயகர் ஆலயம் சேதம்; ஒருவர் பலி

நேற்று நண்பகல் 12 30 மணியளவில் யாழ்ப்பாணம் கற்பக விநாயகர் வீதியை அண்மித்த பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பொம்மர்களின் தாக்குதலால் அவ்வீதியில் உள்ள விநாயகர் ஆலயம் முற்றாகச் சேதமடைந்தது. அருகில் உள்ள வீட்டில் வசித்த ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்.

சுமார் பத்துக்கும் மேற்பட்ட வீடுகள் இத் தாக்குதலால் சேதமடைந்தன.

யாழ். அரச அதிபர் பணிமனையில் சிற்றூழியராகக் கடமையாற்றும் மணி-(35) என்பவரே இச் சம்பவத்தில் இறந்தவராவார்,

சசிந்தா, திருநாவுக்கரசு உட்பட மூவர் பலத்த காயத்துக்குள்ளாகி மானிப்பாய் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். 47 70 கி

### முஸ்லிம் பகுதி குண்டுவீச்சில் மூவர் பலி

யாழ். முஸ்லிம் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விமானக் குண்டுவீச்சில் மூன்று முஸ்லிம்கள் மரணமானார்கள். மேலும் பலர் படுகாயமடைந்தனர்.

முஸ்லிம் பகுதி ஒஸ்மானியாக் கல்லூரிக்கு முன்பாகவே இத்தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

ஜமீல் ஜசிந்தா (14), ஏ. மின்யு அப்துல்வகாப் (28) எம். மிரன்சாயி (52) ஆகிய மூவருமே கொல்லப்பட்டவர்களாவர்.

முஸ்லிம் பகுதி கிராம சேவையாளர் யூனூஸ் (26), காசீப் (38), நசார் (32), பகீர்(22), மீரான் சாகிப் (33) சப்தின் (22), புகாரி (49) ஆகியோர் இச்சம்பவத்தில் படுகாயமுற்றனர். 72-68-73-கி

### திருநெல்வேலிச் சந்தியில் இருவர் பலி

நேற்று மாலை திருநெல்வேலிச் சந்தைக்கு முன்பாக நடாத்தப்பட்ட பொம்மர் தாக்குதலில் சைக்கிளில் வந்த வே. சுப்பிரமணியம் (இ. போ. ச ஊழியர்). பொன்னம்பலம் குகபாலன் குளப்பிட்டி) ஆகிய இருவரும் உடல் சிதறி பலியானார்கள். சிலர் காயமடைந்தனர். இவர்கள் வேடிக்கை பார்த்தார்கத் தெரிவிக்கப்படுகிறது.

திருநெல்வேலிச் சந்தைக்கு முன்னாகவுள்ள ஆடியபாதம் வீதியில் ஆர். நடராசாவின் வீடு பலத்த சேதமடைந்தது.

திருநெல்வேலி மடம் வீதியில் சட்டத்தரணி எஸ். சின்னப்பாவின் வளவில் ஒரு குண்டு விழுந்து வெடித்தது. பொற்பதி வீதியில் சிதம்பரப்பிள்ளை அரியபுத்திரனின் வீடு சேதமடைந்தது.

பரமேஸ்வராச் சந்தி தபாற்கட்டைச் சந்தி, அம்பட்டப்பாலத்தடி ஆகிய பகுதிகளிலும் தாக்குதல் நடாத்தப்பட்டது. க. பாக்கியம் (80 - திருமலை அகதி), செந்தில்குமார் (17) ஆகியோர் காயமடைந்தனர். இதில் சில வீடுகளும் முற்றாகச் சேதமடைந்தன. 71,68,33.ப-10,

## பொலநறுவையில் தாக்குதல்
## 6 சிப்பாய்கள் பலி; 3 பேர் காயம்

பொலநறுவை மாவட்டத்தில் சிங்கபுர பகுதிக்கு அண்மையில் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

ரோந்து சென்ற இராணுவ அணி ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் திடீர் என மேற்கொண்ட இத் தாக்குதலில் 6 சிப்பாய்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர் எனவும் மூன்று சிப்பாய்கள் காயமடைந்தனர் எனவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (து

## முல்லைத்தீவில் அகதிகளுக்கு
## நிவாரணம் கிடைக்கவில்லை

முல்லைத்தீவு மாவட்டத்தில் அகதி முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கு எந்த ஒரு நிறுவனத்தினதும் உதவி வழங்கப்படவில்லை எனப் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் தங்கியுள்ள மக்களுக்கு சர்வோதயம், போரூட் போன்ற நிறுவனங்கள் அடிக்கடி உதவி வருகின்றன.

முல்லைத்தீவில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் உணவின்றி பெரிதும் கஷ்டப்படுவதாகவும் நோயினால் பீடிக்கப்பட்டு வருவதாகவும் அங்கிருந்து வருபவர்கள் தெரிவித்தனர். (43 ரூ)

### உணவுப்பொருளை இறக்க வசதியாக

## ஊரடங்குச் சட்டத்தை நீக்க
## அரச அதிபர் கோரிக்கை

யாழ்.மாவட்டத்திலிருந்து ஊரடங்கு உத்தரவைத் தளர்த்தி பருத்தித்துறையில் தரித்துநிற்கும் கப்பலில் இருந்து பொருட்களை இறக்க வசதி செய்யுமாறு அத்தியாவசிய சேவைகள் நாயகம் ஊடாக பாதுகாப்பு அமைச்சை யாழ். அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிறட் கேட்டுள்ளார்.

பருத்தித்துறைப் பகுதியில் பொருட்களைக் களஞ்சியப் படுத்த போதியளவு இடவசதிகள் இன்மையால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 23


— 04 ஆம் பக்கம் பார்க்க


## நான்கு மாதத்தில் கிடைத்தது
## 12 வீதத்திற்கும் குறைவான உணவு

யாழ். மாவட்டத்திற்கு இரண்டு லொறி அணிகள் மூலமாகவும் ஏழு கப்பல்கள் மூலமாகவும் இதுவரை கிடைக்கப்பெற்ற மொத்த உணவுப் பொருட்கள் 5445 மெற்றிக் தொன் மட்டுமே.

சராசரியாக மாதமொன்றுக்கு அரிசி, மா, சீனி உட்பட 10 ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் யாழ். மாவட்டத்திற்குத் தேவைப்படுமிடத்து, நான்கு


— 04 ஆம் பக்கம் பார்க்க


## நயினாதீவில் இருந்து
## குறிகாட்டுவானுக்கு ஷெல் வீச்சு

நயினாதீவில் முகாமிட்டிருக்கும் கடற்படையினரின் கடற்படைத் தளத்திலிருந்து நேற்று முன்தினமிரவு 9.30 மணியளவில் குறிகாட்டுவான் பகுதிகளை நோக்கி இரண்டு ஷெல்கள் ஏவப்பட்டுள்ளன.

அந்த ஷெல்களில் ஒன்று குறிகாட்டுவான் நூல் நிலையத்திற்கு அருகில் விழுந்து வெடித்துள்ளது. இதனால் நூல் நிலையம் சேதமானது. தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற பேச்சியம்மன் ஆலயத்தின் பின்புறமும் குண்டுகளினால் சேதத்திற்குள்ளானது.

மேற்படி ஆலயத்தின் மேல் கட்டப்பட்டிருந்த ஒலி பெருக்கியும் பெரும் சேதத்திற்குள்ளானது. ஒரு ஷெல் கடலில் விழுந்து வெடித்தது. (20-து)

## நல்லூரில் திலீபனுக்கு அஞ்சலி

நல்லூர் தெற்கு சிற்றூரவையின் ஆதரவில் தியாகி திலீபனின் மூன்றாவது வருட நினைவுநாள் நிகழ்ச்சி நாளை திங்கள் பிற்பகல் 3.00 மணிக்கு நல்லூர் சாதனா பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்களும் பங்கேற்பர். கவிதாஞ்சலியும் இடம்பெறும்.

செவ்வாய்க் கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 4.30 மணி வரை அடையாள உண்ணாவிரதம் நடைபெறவுள்ளது.

25-ம்திகதிசெவ்வாய்க்கிழமை


— 04 ஆம் பக்கம் பார்க்க


## தனியார் வீட்டில் இருந்து
## ஆயுதங்கள் மீட்பு

நேற்று முன்தினம் வவுனியாவில் வீடொன்றில் இருந்து சில ஆயுதங்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டுள்ளன.

செட்டிகுளம் பகுதியில் அமைந்த கைவிடப்பட்ட இவ்


— 04 ஆம் பக்கம் பார்க்க

## சாராயத்தில் கலப்படம் ஐவர் மரணம்

களவாக சாராயம் விற்கும் இடமொன்றில் கலப்படம் செய்யப்பட்ட வைன்ஸ்பிரிட் அருந்தியவர்களில் ஐவர் மரணமாகியுள்ளனர்.

பாணந்துறை பொலீஸ் பகுதியிலுள்ள பயாகலைப் பகுதியில் இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்த கள்ளச்சாராய நிலையத்தை நடாத்தி வந்தவர் தலைமறைவாகியுள்ளார். (கி)


## இப்பில் இப்பில்

இப்பில் இப்பில் விதைபெற விரும்புவோர் ரூ.2 00 அஞ்சல் முத்திரை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்**

09073



## நிமியா உரம்

விவசாயிகளின் வசதி கருதி சங்கானை ப. நோ. கூ. சங்கத்தில் விற்பனைக்குண்டு.

-மில்க்வைற்

09072


## 31-ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

### அமரர் விஸ்வலிங்கம் தியாகராஜா (தியாகு)

(ஊர்காவற்றுறை சங்கத்தலைவர்)

தோற்றம்: 19—06—1927 மறைவு: 24—08—1990

அன்பினால் எம்மை ஆட்சி செய்தவர்
ஆலவிருட்சமாய் எமக்கு நிழலாய் நின்றவர்
இன்சொலால் இனிமையாய் வாழ்ந்தவர்
ஈகைக்கு இலக்கணமாய்த் திகழ்ந்தவர்
உத்தமராய் ஊர் உலகுக்கு வாழ்ந்தவர்
ஊரார் போற்றும் உதார புருஷராய் திகழ்ந்தவர்

எங்கள் அணையாத சோதி என்றும் எளிமையானவர்
ஏற்றமிகு பண்பால்,பாசத்தால்எம்மைப் பிணைத்தவர்
ஐயன் திருநாமம் அயராது ஓதியவர்
ஒருவருடனும் பொல்லாங்கு பேசாதவர்
ஓடி மறைந்ததையா ஓர் மாதம்.

காலஞ்சென்ற ருக்மணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கனகசபாபதி, காலஞ்சென்ற முத்துலிங்கம் தர்மலிங்கம், பரமேஸ்வரியினதும் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற செல்லம்மா, சேதுப்பிள்ளை, பராசக்தி, செல்வராசாவினது அன்பு மைத்துனரும் ஆகிய விஸ்வலிங்கம் தியாகராஜா (தியாகு) அவர்களது அந்தியேட்டியும் வீட்டுக்கிருத்தியமும் இன்று(23-09-1990) ஞாயிறு கரம்பன் கிழக்கில் நடைபெறும்.

சகோதர, சகோதரிகள், மைத்துனன், மைத்துனிமார், பெறாமக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

கரம்பன் கிழக்கு,
ஊர்காவற்றுறை.

09074

## காலமானார்

### அமரர் சிதம்பரப்பிள்ளை நடராசா

(O.I. C., Residual Unit, Highways Dept., Jaffna)

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த திரு. சி. நடராசா 20 - 09 - 90 அன்று காலமானார். இவர் திருமதி இலட்சுமி நடராசாவின் அன்புக்கணவரும், தெய்வேந்திரராசா (ஆசிரியர், வறக்காப்பொல ம. மகாவித்தியாலயம்),பாலேந்திரன் (R. D, D. பூநகரி), திருமதி கலா சண்முகநாதன், இராசேந்திரன் (ஹாட்லிக் கல்லூரி), சுரேந்திரன் (ஹாட்லிக் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், எஸ். சண்முகநாதன் (ஆசிரியர், புற்றளை மகா வித்தியாலயம்), பாமா தெய்வேந்திரராசா (ஆசிரியை, சிதம்பராக் கல்லூரி, வல்வெட்டித்துறை) ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் 21-09-90 காலை 10 மணிக்கு சோனப்பு மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை சக உத்தியோகஸ்தர்களும். ஊழியர்களும், உற்றார், உறவினர், நண்பர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறோம்.

சம்பந்தர் கடை,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்

09075

## குண்டு வீச்சில் ஒரு ஒற்றுமை

நெல்லியடியில் இடம்பெற்று வரும் விமானக் குண்டு வீச்சுத்தாக்குதல் சம்பவங்கள் இங்கு செவ்வாய்க்கிழமை நாட்களில் மட்டுமே நடைபெற்றுவருகிறதை அவதானிக்கக் கூடியதாகஇருக்கிறது.

முதல்தடவையாக நெல்லியடி காளிகோயிலடியில் மில் ஒன்றின் மீது போடப்பட்ட குண்டு வீச்சுச்சம்பவம் செவ்வாய்க்கிழமையே நடந்துள்ளது.

இரண்டாம் முறை நெல்லியடி மத்திய சந்தைக்கு முன்பாக நடந்த விமானத்தாக்குதலும் செவ்வாய்க்கிழமையே நடந்திருக்கிறது.

கடந்த 18-ம்திகதி செவ்வாய் அன்றே மூன்றாவது தாக்குதலும் நெல்லியடி-வதிரி வீதியில் இடம் பெற்றிருக்கிறது.

விமானக் குண்டு வீச்சுத் தாக்குதல் பட்டியலில் நெல்லியடிப் பகுதிக்கு செவ்வாய்க்கிழமைதான் ஒதுக்கப்பட்டுள்ளதா என இப்பகுதி மக்கள் பேசிக்கொள்கிறார்கள். (கி)

## தபால்கள் தேங்கியுள்ளன

முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டத்துக்குரிய தபால் பொதிகள் கடந்த மூன்று மாதகாலமாக யாழ்ப்பாணம் தபாலகத்தில் தேங்கியுள்ளன.

இதில் சென்ற மாதம் வந்த தபால்பொதிகளில் முல்லைத்தீவுக்குரிய தபால்பொதிகளை முல்லைத்தீவு பிரதம தபால் அதிபர் சயிக்கிளில் வந்து எடுத்துச் சென்றதும் குறிப்பிடத்தக்கது.

இது பற்றி தபால் திணைக்கள அதிகாரியிடம் கேட்டபோது நிலைமை சீரடைந்ததும் தபால் பொதிகள் அனுப்பி வைக்கப்படுமென்று அவர் தெரிவித்தார் (33ரூ)

## முகாமருகில் வயோதிபர் மரணம்

இராணுவ தடைமுகாம் அருகில் வயோதிபர் மாரடைப்பினால் மரணம் அடைந்தார்.

வவுனியா — இறம்பைக் குளத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

பெரும்பான்மை சமூகத்தினைச் சேர்ந்த இவரது சடலத்தினை அவரது சொந்த ஊருக்கு அனுப்பிவைப்பதற்கான நடவடிக்கையில் பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டிருந்தனர்.

இறந்தவர் தென்னிலங்கையினைச் சேர்ந்தவர். வவுனியா சந்தைக்கு வரும்போது மாரடைப்பினால் மரணமானது குறிப்பிடத்தக்கது. (11-கி


## சிறு விளம்பரம்

### புத்தகம்

தாவர போசன சமையல் புஷ்பாஞ்ஜலி முருகேசபிள்ளை எழுதிய சிறந்த சமையல் நூல், விலை ரூபா 150/- விற்பனையாளர்கள்: பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். 09031

### தேவை

மலைவேம்பு விதை தேவை. மில்க்வைற் — யாழ்ப்பாணம். 09071

### சேவை

போட்டோஸ்ரட் பிரதிகளை பெற்றிடவும், அடையாள அட்டைகள், ஆவணங்கள் பிளாஸ்ரிக் கவரிடவும் கிளீன்கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். வேலை நேரம் 10 மணிக்கும், 3 மணிக்கும் இடையில். 09066


விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணியினர் நடாத்தும்

## மாவீரர் தின கலை கலாசாரப் போட்டிகள்

**தமிழீழ மக்களே!**

- இவ்வாண்டு மாவீரர் தினத்தையொட்டி விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினர் எழுத்தாளர், கலைஞர்கள், மற்றும் இத்துறையில் ஆர்வமிக்கோர், மாணவர்கள் அனைவரையும்ஊக்குவிப்பதற்காகவும், அவர்களின் ஆற்றல்களை வெளிக்கொணர்வதற்காகவும் கலை கலாசாரப் போட்டிகளை நடாத்தவுள்ளது.
- இப்போட்டிகள் கீழ்காணும் விடயங்களில் நடைபெறவுள்ளன.
  - நாவல்
  - சிறுகதை
  - கவிதை
  - கட்டுரை
  - சுவரொட்டி
- போட்டிகள் அனைத்தும் மாணவர்களுக்கு வேறாகவும் மற்றையோருக்கு வேறாகவும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளது.
- தமிழீழத்தில் அதியுயர் கௌரவமிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ள இப்போட்டிகளில் ஆர்வமும் ஆற்றலுமிக்க அனைவரும் கலந்து கொள்ளலாம்.

## போட்டிகளுக்கான விதிமுறைகள்

- தமிழீழ மக்கள் எவரும் கலந்து கொள்ளலாம்.
- படைப்புக்கள் யாவும் தமிழீழ விடுதலைப் போரை அடிப்படையாகக் கொண்டு அதனை முன்னெடுத்துச் செல்லும் கருத்துக்கள் செறிந்ததாகவும், சமகால எமது மண்ணினது மக்களினதும் பிரச்சினைகளை அடிநாதமாகக் கொண்ட யதார்த்தத் தன்மை மிக்கதாகவும் இருத்தல் அவசியம். மண்மீட்புப் போரில் இன்னுயிர் ஈந்த வீரவேங்கைகளினதும், வீராங்கனைகளினதும் உணர்வுகளையும். இதயதாகத்தையும் பிரதிபலித்தல் வேண்டும்.
- சுவரொட்டிக்கான கருப்பொருட்களும் மேற்குறிப்பிட்ட தன்மை மிக்கதாகவே இருத்தல் வேண்டும்.
- இலக்கியப் படைப்புக்கள் யாவும் தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதப்பட்டதாக அல்லது தட்டச்சு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும்.
- ஒவ்வொரு படைப்பிலும் மூன்று பிரதிகள் அனுப்புதல் வேண்டும்.
- சிறுகதைகள் 10 பக்கங்களுக்கு மேற்படாததாகவும் நாவல்கள் 100 பக்கங்களுக்குக் குறையாததாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் 60 வரிகளுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.
- சுவரொட்டிகள் யாவும், 'ஆட்போட்'டில் 60cm × 40cm அளவு கொண்டதாக வண்ணப் படங்களாகவோ (எந்த வண்ணமும் உபயோகிக்கப்படுத்தலாம்) கறுப்பு வெள்ளைப் படங்களாகவோ வரைந்து அனுப்பலாம்.
- போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களது படைப்புக்கள் அவர்களது பாடசாலை அதிபர் அல்லது வகுப்பாசிரியர் ஆகியோர் மூலம் அவர்களது சொந்தப் படைப்புத்தான் என்பது உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- போட்டிக்கான கட்டுரைகள் 3000 - 5000 சொற்களுக்கு மேற்படாதிருத்தல் நல்லது.
- போட்டிகளுக்கான படைப்புகள் அனுப்பப்பட வேண்டிய இறுதித் திகதி 15. 10. 1990,
- அனைத்து ஆக்கங்களும் முரசொலி அலுவலகத்திற்குக் குறிப்பிட்ட திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது படைப்பாளிகளின் சொந்த ஊரின் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பிரதேசப் பொறுப்பாளரிடம் நேரில் கையளிக்க வேண்டும்.
- தகுதி வாய்ந்த நடுவர் குழுவின் தீர்ப்பே இறுதியாகும்.

## மாணவர்க்கான போட்டிகள் பற்றிய சிறப்பு விதிகள்

- மாணவர்க்கான போட்டிகள் பின்வரும் விடயங்களில் நடைபெறும்.
  1) சிறுகதை. 2) கவிதை. 3) கட்டுரை. 4) ஓவியம்.
- சிறுகதை, கவிதை, ஓவியம் ஆகியன முன்னர் மேலே குறிப்பிட்ட தன்மைகளைக் கொண்டதாக இருத்தல் வேண்டும்
- ஓவியங்கள் 18'' × 12'' அளவு கொண்டதாக இருத்தல் வேண்டும்.
- கட்டுரைகள் கீழ்வரும் அம்சங்களைக் கொண்டதாகவும் 2500 சொற்களுக்கு மேற்படாததாகவும் அமைதல் வேண்டும்.
  1) விடுதலைப் போராட்டமும் மாணவர் பங்களிப்பும்.
  2) தமிழீழத்தின் பொருளாதார அபிவிருத்தி.
  3) தமிழீழ மாணவர்களது கல்வியின் எதிர்காலம்.
  4) இன்றைய சூழ்நிலையில் மாணவர்களின் சமூகப்பணிகள்.
  5) "போராடுவதற்காக கற்போம்"
- மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பகுதிகளாக நடாத்தப்படும்.
  - 15 வயதிற்குட்பட்டோர்—கீழ்ப்பிரிவு
  - 15 - 17 வயதிற்கிடைப்பட்டோர்—மத்திய பிரிவு
  - 17 வயதிற்கு மேற்பட்டோர் —மேற்பிரிவு
- ஒவ்வொரு பிரிவுக்கும் தனித்தனியாகப் பரிசுகள் வழங்கப்படும்.

இந்நாள் இம்மாதம் 1987ஆம் ஆண்டு - முரசொலி தந்த சிறப்புச் செய்திகள்

## 'தம்பி இறப்பில் எழுச்சியெனில், மகிழ்ச்சியே'

திலீபனின் உடல்நிலை தொடர்ந்தும் மிக மோசமான நிலையிலேயே காணப் பட்டது. அவரது கண்கள் முற்றாகச் செயலிழக்கும் நிலையில் இருந்தன. குரல் வெளிவரவில்லை. கைகளாலேயே சைகை காட்டினார். அவர் கோமா நிலையை அடைந்து கொண்டிருக்கிறார் எனவும் அறிவிக்கப்பட்டது.

''தம்பி திலீபன் இறப்பதினால் சமுதாய எழுச்சி ஏற்படுமாயின் அவரது மரணத்தை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்வேன்'' என்று திலீபனின் மூத்த சகோதரர் இளங்கோ 'முரசொலி'க்குத் தெரிவித்தார்.

''திலீபன் தமிழ் சமுதாயத்திற்காக இன்னும் சாதிக்க வேண்டியது எவ்வளவோ உள்ளது. அதற்கு முன் அவர் மரணத்தைத் தழுவப்போகின்றாரே என்பதை நினைக்கத்தான் வேதனையாக இருக்கிறது. என்றாலும் சமுதாயத்தில் எழுச்சி, புரட்சி ஏற்படவேண்டுமாயின் யாரோ ஒருவர் இறக்கத்தான் வேண்டும். அந்த வகையில் திலீபனின் இலட்சிய மரணத்தை நான் பெருமையுடன் ஏற்றுக் கொள்கின்றேன்'' என அவர் கண்ணீர் மல்க மேலும் தெரிவித்தார்.

தந்தையைக் கண்டால் வேதனையைத் தாங்கமுடியாத நிலை ஏற்படும் என்பதினால் உண்ணாவிரத மேடைப்பக்கம் அவரை வரவிட வேண்டாமென ஏற்கனவே கண்டிப்பாகக் கூறியிருந்தார் திலீபன். (கி - ஸ்ரீ)

★ அமைச்சர் ரஞ்சன் சொல்கிறார்:

# இனப்பிரச்சினைக்கு ராணுவ தீர்வு; நீண்டகாலம் தேவையாம்

இனப்பிரச்சினைக்கு இராணுவரீதியில்தீர்வுகாண நீண்டகாலம் எடுக்கும் என்பதை அரசு தற்பொழுது அனுபவ பூர்வமாக உணருகின்றது.

இப்படித் தெரிவித்திருக்கிறார் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா.

நேற்று முன்தினம் பாராளு மன்றத்தில் அமைச்சர் ரஞ்சன் துணைப்படை திருத்தச்சட்ட மூல விவாதத்தில் உரையாற்றினார். அவர் அங்கு உரையாற்றுகையில்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு எதிர்க்கட்சிகள் ஆதரவுதர வேண்டும். அவர்களின் ஆதரவு கிடைக்கவில்லையென்றால் வடக்குகிழக்குப் பிரச்சினைக்கு இராணுவ தீர்வு காணும் நிலை அரசுக்கு ஏற்படும்.

படையினருக்கு ஆயுதம் கொள்வனவு செய்வதில் எந்த வித முறைகேடும் இடம்பெற வில்லை. அப்படிமுறைகேடுகள் ஏற்பட நான் அனுமதிக்கவும் மாட்டேன் எனவும் தெரிவித்தார். (கி)

## புலிகள் வீழ்த்திய விமானம் எஸ்.எப்.260 ரகத்தைச் சேர்ந்ததாம்

யாழ். கோட்டை முற்றுகை முயற்சியின் போது விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட 'சியாமா செட்டி' குண்டுவீச்சு விமானம் எஸ். எப். 260 ரகத்தைச் சேர்ந்தது என கொழும்பில் விமானப்படைத் தலைமையலுவலகம் தெரிவித்துள்ளது.

இத்தாலியத் தயாரிப்பான இந்த குண்டுவீச்சு விமானம் ஒற்றை என்ஜின் பொருத்தப்பட்டது. ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஜனாதிபதியாக இருந்த சமயம் கொள்வனவு செய்யப்பட்டது.

விமானத்தை ஓட்டிச் சென்ற விமானப்படை விமானி பிரியதர்சனா அபய வீர குணவர்த்தனா 1986-ம் ஆண்டு விமானப் படையில் சேர்ந்தவர்.

கோட்டைப் பகுதியில் குண்டு ஒன்றை போட்டு விட்டு மேலெழும்ப சற்று தாமதமாகி விட்டதாகவும், அதற்கிடையில் விடுதலைப் புலிகளின் சூடு விமானத்தைப் பதம் பார்த்ததாகவும் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (கி)

## ஈழத்தமிழர் பிரச்சினை; சட்ட சபையில் கேட்டவை

பீட்டர் அல்போன்ஸ் (காங்):-

இலங்கையில் தாக்குதல் அதிகரித்து வருகிறது. தமிழர்கள் அகதிகளாகத் தமிழகத்துக்கு வந்த வண்ணமாக உள்ளனர். இப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப் படவேண்டும்.

தமிழகத்தில் தமிழர்களுக்கு என்ன உரிமையுள்ளதோ அதே உரிமை இலங்கைத் தமிழர்களுக்கும் கிடைக்கவேண்டும்.

மோகன் (தி. மு. க.):-

சிங்களப் படைகள் 3 வித தாக்குதலைத் துவக்கி உள்ளனர். இதனால் தமிழ் நாட்டுக்கு அகதிகள் வருகின்றார்கள். தமிழீழ மக்கள் என்ன விரும்புகிறார்களோ அதுதான் எங்கள் முடிவு. அவர்கள் எந்த முடிவு எடுத்தாலும் அவர்கள் பின்னால் இருப்போம். எதையும் அவர்கள் மீது திணிக்கமாட்டோம்.

லத்தீப் (மு. லீக்):-

ஒரு நாடு தனது சொந்தப் பிரஜைகளைத் தனது இராணுவத்தின் மூலம் தொடர்ந்து அழித்துவருகிறது. இதைச் சர்வதேச நாடுகளும், சர்வதேச சட்டமும் ஏற்றுக்கொள்ளுமா? ராஜீவ்- ஜெயவர்த்தனா உடன் பாட்டின்படி நமது இராணுவம் இலங்கை சென்றது. அங்கு இராணுவம் என்ன செய்தது?

முதல்வர் கருணாநிதி;-

இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதையும் அகதிகள் வருகையின் மூலம் ஒருவகையான ஆக்கிரமிபபை இலங்கை, இந்திய அரசின் மீது செய்து வருவதையும் சகிக்கமுடியாது.

நாம் மத்திய அரசுக்கு ஈழப்பிரச்சினைக்கு ஈழம் தான் தீர்வு என்று சொன்னோம். அது கிடைத்தால் மகிழ்ச்சிதான். மகாபாரதத்தில் கூட முதலில் கிருஷ்ண பரமாத்மா ஐந்து நாடு கேட்டார். பின்னர் 5 ஊர். 5 தெரு. 5 வீடு எனக்கேட்டார். அதைக்கூட கொடுக்காததால்தான் போர் நடந்தது. வீடு இல்லாதவர் நாட்டைப் பெற்றனர்.

இலங்கைத் தமிழர் தலைவர்களும் முதலில் அகிம்சை முறையிற்தான் போராட்டத்தைத் துவக்கினர். பின்னர் பிரபாகரன் துப்பாக்கி எடுக்கும் நிலை உருவாகி விட்டது. (கி)

## உற்சவம் ஒத்திவைப்பு

சரித்திரப் பிரசித்தி பெற்ற துன்னாலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோவில் வருடாந்த உற்சவம் தெய்வ அனுக்கிரகத்துடன் ஒத்திவைக்கப்பட்டது.

ஒத்திவைக்கப்பட்ட இவ் வருடாந்த உற்சவம் எதிர் வரும் பங்குனிமாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது. (50கி)

## ஓய்வூதியக்காரர் திண்டாட்டம்

யாழ். கச்சேரியின் ஓய்வூதியக் கிளையில் அலுவல்கள் எதுவும் நடைபெறுவதில்லை.

எனினும் ஓய்வூதியக் கிளையின் கணக்காளர் நாளாந்தம் வந்து திரும்புவதைக் காணக் கூடியதாக இருக்கிறது.

அதேபோன்று ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியக்காரர்களும் நாளாந்தம்கச்சேரிக்கு வருகை தருகின்ற போதிலும் ஊழியர் வராத காரணத்தினால் சோர்வுடன் திரும்புவதைக் காணக்கூடியதாக உள்ளது. (ப.17)

## திருடர் கொட்டம்

பாதுகாப்புத் தேடி இடம் பெயர்ந்து அகதியாக வேறிடம் சென்ற ஒருவரது வீட்டில் திருடர் தம் கைவரிசையைக் காட்டிச் சென்றுள்ள சம்பவம் ஒன்று யாழ்ப்பாணம் பலாலி வீதி 2-ம் ஒழுங்கையில் உள்ள ஐ. குமாரசாமி என்பவரது வீட்டில் நிகழ்ந்துள்ளது. அவருக்குச் சொந்தமான பெறுமதியான கடைப் பொருட்கள் மற்றும் வீட்டுப் பொருட்கள் ஏககாலத்தில் இங்கு வீட்டுக் கதவை உடைத்து உட்புகுந்து திருடப் பட்டுள்ளன. அங்கு நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் ஒன்றின் பின் சில்லும் செயினும் கூட திருடப்பட்டுள்ளன. (ஸ்ரீ)

## முல்லையில் மீன்விலை அதிகரிப்பு

முல்லைத்தீவில் மீனின் விலை என்றுமில்லாதவாறு அதிகரித்து வருவதாகக் கூறப் படுகின்றது.

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் கடற்படையினர் நிரந்தரமாகத் தங்கியிருப்பதால் கடற்றொழிலாளர்கள் பலர் மீன்பிடிக்கச் செல்வதில்லையாம்.

இதன் காரணமாக ஒரு சிலரே மீன்பிடிக்கச் செல்வதால் பிடிக்கப்படும் மீனின் அளவு குறைவாக இருப்பதால் மீனின்விலை அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது. (43கி)

## பொருட்கள் இறக்கப்படுகின்றன

பருத்தித்துறைக்கு கடந்த புதன்கிழமை வந்தடைந்த லங்காசிறி என்ற கப்பலிலிருந்து அத்தியாவசியப் பொருட்கள் துரிதமாக இறக்கப்படு வருகின்றன. (50 கி)

## தஸ்தாவேஜுகள் பழுதடையும் நிலையில்

முல்லைத்தீவுக் கச்சேரி, மற்றும் காணி அலுவலகம் ஆகியவற்றில் உள்ள முக்கிய தஸ்தாவேஜுகள் யாவும் பழுதடைந்து விடக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அம் மாவட்ட உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

குறிப்பாக பிறப்புஅத்தாட்சிப்பத்திரம், காணி உறுதிகள் போன்ற முக்கிய பத்திரங்கள் பழுதடைந்து விடலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அண்மையில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலினால் கச்சேரிப் பகுதி பெருமளவு சேதமடைந்தது. அத்துடன் தற்போது அப்பகுதியில் மழை பெய்வதால் அங்கு உள்ள பத்திரங்கள் யாவும் பழுதடைந்துவிடும்என நம்பப் படுகின்றது. (43 கி)

## மழையில்லை; விவசாயிகள் ஏமாற்றம்

குடாநாட்டிலுள்ள விவசாயிகள் காலபோக நெற்செய்கைக்காக வானத்தைப் பார்த்துப் பார்த்து ஏமாற்றமடைந்து வருகின்றனர்.

சில பகுதிகளிலுள்ள விவசாயிகள் ம[illegible]க்கூடிய சாத்தியக் கூறுகள் இரு[illegible]பதை உணர்ந்து புழுதி விதைப்பு விதைத்துள்ளனர். மழை இவ்வாரத்தினுள் வராவிட்டால் பெருநஷ்டம் ஏற்படுமெனவும் அஞ்சுகின்றனர். (ப- 1கி)

## கல்லும் அவர்களுக்கு ஆயுதம்

ஹெலியில் இருந்து பொது மக்களைத் தாக்குவதற்கு மிக மலிவான 'ஆயுதம்' ஒன்றை அண்மைக்காலத்தில் இராணுவத்தினர் பாவிக்கத் தொடங்கி உள்ளார்கள் என்று தெரிய வருகிறது.

நேற்றுக் காலை 8 மணியளவில் கைதடியில் வெகு தாழ்வாகப் பறந்த ''ஹெலி'' வயலில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் மீது கற்களால் தாக்கியுள்ளது தெய்வாதீனமாக ஒருவருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. (16-ஸ்ரீ)

## மகளை நினைத்து தந்தை தற்கொலை

குவைற் நாட்டில் பணிபுரியும் தனது மகளின் நிலை பற்றி கவலை கொண்ட 70 வயதுடைய தகப்பன் ஒருவர் மனவேதனை அடைந்து நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் எல்பிட்டியாவில் நடந்துள்ளது (கி)

## தபால்கள் தரம்பிரிப்பு

சுன்னாகம் தபாலகத்தில் கப்பலில் இருந்து தருவிக்கப்பட்ட 200 தபால் பொதிகளையும் தரம்பிரிக்கும் வேலைகள் துரிதகதியில் நடைபெறுவதாக மாவட்ட தபால் அத்தியட்சகர் தெரிவித்தார்.

தரம்பிரிப்பு வேலை முடிந்ததும் அவற்றை விநியோகிப்பதற்கான நடவடிக்கைகள் தபாலகங்கள் மூலம் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் கூறினார். (ப-11-கி)

தொடர் காவியம்

அங்கம்: 9

## தியாகத் திலீபம்

— மு. வே. யோ. வாஞ்சிநாதன்

தமிழ் இனத்துக்காக உண்ணாவிரதம் இருந்து தன் இன்னுயிர் தந்த மாபெரும் தியாகி அமரர் திலீபன் அவர்கள். அன்னாரது உண்ணா நோன்பின் ஒன்பதாம் புனித நாளின் நினைவு இந்நாள்.

தியாகச் சுடராம் திலீபன் நினைவைப் போற்றி அன்னாருக்கு அஞ்சலி செலுத்து முகமாக இத்தொடர் காவியத்தை வெளியிடுகிறோம்.

ஈழம் ஈன்றெடுத்த இணையற்ற மாமனிதன்
வேளமென நின்று மேடைகளில் முழங்கியவன்
சோளப் பொரியாகச் சோர்ந்து கிடந்தாலும்
காலம் அவனுணர்வைக் காயாமல் வைக்கிறது!

சந்தனக் கட்டையொன்று சாகவே தேய்கிறது!
வந்தவரின் விழிகள் நீரூறி வழிகையிலே
நந்தவன மொன்றில் நறுமலர் காய்கிறது
செந்தமிழர் செல்வம் சீரழிந்து போகிறது!

பன்னிரண்டு நாட்கள் படுத்திருந்த திலீபன்
கண்ணிரண்டை மூடக் கனலொன்று மூள்கிறது!
தன்னுயிரைத் தமிழின் விடிவுக்குத் தந்தவனின்
பொன்னுடலைப் பார்க்க மக்களலை பொங்கியது!

ஏக்கமுடன் நெஞ்சை இறுக்கியே பொத்தியோரும்
பார்த்த பொழுது பதறியே துடித்தோரும்
துக்கமது தாளாமல் துவண்டங்கே விழுந்தோரும்
காத்திருந்த வேளையது .. கனல்நெஞ்சை வாட்டியது!

(வளரும்)

# முதலுதவிச் சிகிச்சை நிலையத்தில் ஆரம்பக்கல்விப் போதனை

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் முறைசாராக் கல்விப் பிரிவினரால் யாழ். மாவட்டத்தில் நடாத்தப்படும் முதலுதவிச் சிகிச்சை நிலையங்களினால் ஆரம்பக் கல்வி வகுப்புக்கள் விஜயதசமி நாளன்று ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

முதற்கட்டமாக ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 7 வரையிலான மாணவர்களுக்கு உரிய பாடத்திட்டத்தின்படி கற்பிக்கப்படும். முதலுதவிச் சிகிச்சை நிலைய அங்கத்தவர்களால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

மாணவரின் பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு நிலையத்தினரால் ஒழுங்கு செய்யப்படும். பல்வேறுஸ்தாபனங்களில் கல்விப் போதனை நடைபெறும். காலவேளைகள் யாவும் நிலையங்கள் அமைந்துள்ள சூழலுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும்.

முறையான கல்வித்திட்டச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்வரை இத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (9 கி)

# அரச அதிகாரிகளும் கூட்டுறவுச் சங்கங்களும் பங்கீட்டு விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும்

இடம் பெயர்ந்த மக்கள் பங்கீட்டு உணவுப் பொருட்களைப் பெற முடியாது அலைந்து திரிகின்றனர். ஆகவே அதிகாரிகளும், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி புனர்வாழ்வுப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அவ்வாறு இடம் பெயர்ந்தவர்கள் இந்த இலவச உணவுப் பங்கீட்டைப் பெறுவதில் ஏதாவது தடைகள் இருந்தால் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தவர்களுக்கான அனுமதிப்பத்திரங்கள் கிடைத்த எவருக்கும் கையிருப்பில் உணவுப் பொருட்கள் உள்ள நிலையில் பங்கீட்டுக்கான அப்பொருட்களை கூட்டுறவுச் சங்கங்கள் வழங்காது விடமுடியாது.

இடம் பெயர்ந்தவர்கள் தாம் தங்கியுள்ள கிராம சேவகர் பிரிவுக்கு ஊடாகவே இலவச உணவுப் பங்கீட்டுக்கான பெர்மிட்டுக்களை பெற உரித்துடையவர்கள் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ரூ)

# நெல்லியடியில் வெடிக்காத குண்டு மீட்கப்பட்டது

அண்மையில் நெல்லியடியில் நடைபெற்ற பொம்மர் தாக்குதலில் வெடிக்காத நிலையில் இருந்த பொம்மர் குண்டு ஒன்று எடுக்கப்பட்டது.

இந்தக்குண்டு நெல்லியடி இலங்கை வங்கிக் கிளைக்கு அருகாமையில் புதைந்து கிடந்தது. குண்டு எடுக்கப்படும் வரை இந்தவீதியால் பயணம் செய்வது தடைசெய்யப்பட்டு இருந்தது.

இக்குண்டு நிலத்தில் சுமார் நான்கு அடி ஆழத்திற்கு மேல் புதைந்து இருந்தது. இதன் விசிறி மட்டும் நிலத்தின் மேல் தெரியும் நிலையில் இருந்தது. (71.து)

# கொழும்புப் பயணிகளிடம் போலி அனுமதிப்பத்திரம்

விடுதலைப் புலிகளினால் வழங்கப்பட்டது போன்ற போலி அனுமதிப் பத்திரங்களுடன் கொழும்பு சென்ற மூன்று குடும்பத்தினர் நேற்று முன்தினம் சங்குப்பிட்டியில் வைத்துப் பிடிபட்டனர்.

இதற்கு உடந்தையாக இருந்த சில ஆட்டோக்காரர்களும் விசாரணைகளின் பின் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

இந்தப் போலி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டமை குறித்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (71 ரூ)

## கிளினிக்குகள் வழமைபோல்

மானிப்பாயில் இயங்கும் போதனாவைத்தியசாலையில் வெளிநோயாளருக்கு அளிக்கப்பட்டு வந்த சிகிச்சைகள், கிளினுக்குகள் யாவும் தொடர்ந்து நடைபெறுவதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றும் கிளினிக்குகள், வெளிநோயாளர் பிரிவு என்பனவற்றிற்கு நோயாளர்கள் அதிகமாக வந்திருந்ததைக் காணமுடிந்தது. ஊரடங்கு தொடர்கின்ற போதும் இங்கு நோயாளர் வரவு அதிகரித்துக் காணப்பட்டது. (68 கி)

**நான்கு...**
மாதங்களுக்கு அரசினால் அனுப்பப்பட்ட உணவுப் பொருட்கள் 12 சதவீத உணவுத் தேவையைக்கூட பூர்த்தி செய்யவில்லை எனக் கூட்டுறவுச்சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுவரை கிடைக்கப்பெற்ற 2398 மெ. தொன் அரிசி 1923 மெ. தொன் மா, 768 மெ. தொன் சீனி, 356 மெ. தொன் பருப்பு ஆகிய பொருட்களைக் கொண்டே யாழ். மாவட்டத்திலுள்ள பத்து லட்சம் மக்களைக் கொண்ட 2, 15, 000 குடும்பங்களுக்கு 1-ம், 2-ம் கட்ட உணவுப் பொருட்களைப் பங்கீடு செய்ய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (66-து)

## சம்பளம் வழங்கப்படும்

பளைப் பகுதி கொத்தணிக்குட்பட்ட பாடசாலையின் உத்தியோகஸ்தர்கள் அனைவருக்கும் சம்பளப் பணம் வழங்கப்படுகிறது.

இப்பகுதி கொத்தணிப் பாடசாலை உட்பட்ட தமது பாடசாலை அதிபர்களைச் சந்தித்து சம்பளப் பணத்தைப் பெற்றுக்கொள்ளும்படி கொத்தணி அதிபர் அ.பொ.செல்லையா கேட்டுக் கொள்கின்றார். (71 ரூ)

**தனியார்...**
வீட்டிலிருந்து ரி-56 துப்பாக்கி ஒன்று, நான்கு ரவைக் கூடு, 70 ரவைகள், ஜே. ஆர். கிரனைட் மூன்று என்பன புலிகளினால் மீட்கப்பட்டுள்ளன,

மேற்படி வீட்டில் முன்னர் தமிழ்க்குழு ஒன்று தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (து)

**ஊரடங்குச்...**
பல நோ. கூ. சங்கங்களும் தமது லொறிகள் மூலம் பருத்தித்துறையல் இருந்து பொருட்களை ஏற்றி ஏனைய இடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றது.

இதைவிட மேலும் பொருட்கள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் வடபகுதி நோக்கி வர இருப்பதால் ஊரடங்கு உத்தரவை நீக்கவேண்டிய தன் அவசியத்தையும் அரச அதிபர் வலியுறுத்தியுள்ளார். 66 கி

## இடம்பெயர்ந்து நிவாரணம் பெறாதவர்களுக்கு

யாழ், உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம் பெயர்ந்தோர்தத் தமதுகிராம சேவையாளர் பிரிவில் இருந்து தாம் அங்கு நிவாரணம் பெறவில்லையென உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை சமர்ப்பித்தால் மட்டுமே இடம்பெயர்ந்தோர்க்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ள முடியுமெனத் தெரிவிக்கப்படுகிறது,

இக்கடிதம் பெற இயலாதவிடத்து உணவு முத்திரை, பங்கீட்டு அட்டை என்பவற்றைச் சமர்ப்பித்து நிவாரணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்படுகிறது. (71ரூ)

## இராணுவ சீருடைகள் கைப்பற்றப்பட்டன

சிங்கப்பூரில் இருந்து கொழும்பிற்கு கப்பலில் வந்த கொள்கலனில் இராணுவ சீருடைகள், மோட்டார் படகுகளுக்கான யந்திரங்கள், உதிரிப் பாகங்கள், பற்றறிகள் என்பன இருந்தமை துறைமுகப்பொலிஸாரினால் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவ்க்கப்படுகிறது.

## சிகரட் பறிமுதல்

கடந்த வாரத்தில் வவுனியாவில் இருந்து வந்த இளைஞர் இடமிருந்து 2000 ரூபா பெறுமதியான சிகரெட் பைக்கட்டுக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. ப-6 கி

## வீரமரணம்

நேற்று நண்பகல் மண்டைதீவு இராணுவமுகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலில் காவல் கடமையில் ஈடுபட்டு இருந்த வீர வேங்கை சத்தியன் (பெரியண்ணன் ஜெகராஜா, அம்பன் குடத்தனை) வீரமரணம் அடைந்தார். இவருக்கு விடுதலைப்புலிகள் வீரவணக்கத்தைத் தெரிவிக்கின்றனர். து

**நல்லூரில்...**
மூளாய் சித்தி விநாயகர் ஆலயத்தில் உண்ணாவிரதம் நடைபெறும்.

இன்று இணுவில் சிவகாமி அம்மன் கோயில் முன்பாக அஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. அலங்காரஊர்தியும் இடம்பெறவுள்ளது. (71ஶ்ரீ)

நவராத்திரிச் சிந்தனை - 5

## பயத்தைப் போக்குகின்றவள் பராசக்தி

அம்பிகைக்குரிய திருநாமங்களுள் 'பயாபஹா' என்பதும் ஒன்று. பயத்தைப் போக்குகின்றவள் என்பது அதன் பொருள்.

பயம் எங்கிருந்து எப்படி உண்டாகிறது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். பயத்துக்குப் பிறப்பிடம் அஞ்ஞானம். அஞ்ஞானத்தின்றே தான் வேறு மற்ற உயிர்கள்வேறு என்னும் பாகுபாடு வருகிறது. மற்ற உயிர்களைத் தனக்கு வேற்றார்களாகக் கருதுவது அஞ்ஞானத்தின் செயல். பிற உயிர்களுக்குத் தீங்கு செய்ய நினைப்பதும் அஞ்ஞானத்தின் விளைவு. தீங்கின் வாயிலாகப் பிற உயிர்களின் மீது துன்பம் திணிக்கப்படுகிறது. அறியாமையில் உழல்பவன் பிற உயிர்கள் மீது துன்பத்தைத்திணித்துவிட்டுப்பிறகு அதில்அவன்திருப்தி அடைகிறான். தன்னிலும் எளியநிலையில் இருக்கும் உயிர்களுக்கு அங்ஙனம் தீமை செய்வது சாத்தியம். அத்தகைய மனிதன் தன்னிலும் வலிய உயிர்களைச் சந்திக்கிறான். அந்த வலிய உயிர்கள் தனக்குத் தீங்கு செய்யும் என்றும் சந்தேகப்படுகிறான். தான் தீங்கு செய்து பழகியிருப்பதனால் மற்ற உயிர்களும் தனக்குத் தீங்கு செய்யும் என்னும் ஐயம் வருகிறது. அந்த ஐயத்தைத் தொடர்ந்து பயம் வருகிறது. பிற உயிர்களுக்குப் பயத்தை ஊட்டுபவனே பிற உயிர்கள் தனக்குப் பயத்தை ஊட்டும் என்று எண்ணி அஞ்சுகிறான். ஆனால் அம்பிகை வழிபாட்டில் ஆழ்ந்து ஊறியிருப்பவனுக்குத் தன்னுயிர் மன்னுயிர் என்னும் வேற்றுமையில்லை. அண்டங்கள் எங்குமிருக்கும் அனந்தங்கோடி உயிர்களெல்லாம் அம்பிகையின் குழந்தைகள்; அம்பிகையின் சொரூபங்கள். அத்தகைய பரந்த கண்கொண்டு காண்கின்றவன் எந்த உயிர்க்கும் தீங்கு செய்வதில்லை. எந்த உயிராவது தனக்குத் தீங்கு செய்யும் என்று பயப்படுவதுமில்லை.

# திருமணங்கள் மட்டுமல்ல மரண ஊர்வலங்களும்கூட..

இவ்வசாதாரண போர்க் காலத்தில் திருமணங்கள் மட்டுமல்ல மரணச் சடங்குகளும் வித்தியாசமாகவே இடம் பெறுகின்றன.

நேற்று ஏழாலை மேற்கைச் சேர்ந்த ஐயாக்குட்டி என்பவரின் மரண ஊர்வலத்தில் 'லான் மாஸ்ட''ரில் கொள்ளி வைப்பவரும் வேறிருவரும் அருகிருக்க சாரதியுடன் நான்கு பேர் மட்டும் சுடுகாட்டிற்குச் சென்றனர்.

பெட்டியில் எவ்வித அலங்கரிப்புக்களுமில்லை. 'கொள்ளிக்குடம்' ஒன்றே மரண ஊர்வலம் என்பதை உணர்த்தியது. ப-2-கி

# கொத்தணி அதிபர் கவனத்துக்கு

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் கொத்தணி அதிபர்களின் கூட்டம் எதிர் வரும் 26-9-90 காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் அமைந்திருக்கும் கல்வித் திணைக்களத்தில் நடைபெறவுள்ளது. சகல கொத்தணி அதிபர்களும், கல்வி அதிகாரிகளும் இக்கூட்டத்திற்கு சமுகம் கொடுக்குமாறு கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். இக் கூட்டத்தில் ஆசிரியர் சம்பள்ம், அதிபர் நியமனம், இக் காலத்திற்கான செயற்திட்டங்கள் ஆகியவை பற்றித் தீர்மானங்கள் எடுக்கப்படும் என தெரியவருகிறது.(ப-17து

# நெடுந்தீவு மக்களுக்கு தென்.திருச்சபை நிவாரணம்

நெடுந்தீவு தென். இந்திய திருச்சபையினர் மூலம் நெடுந்தீவு மக்களுக்கு இலவச உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டன.

தொடர்ச்சியான ஊரடங்கு உத்தரவினாலும், போக்குவரத்து வசதிகள் தடைப்பட்டமையாலும் தனிமைப் படுத்தப்பட்ட நெடுந்தீவு மக்களின் உணவுப் பஞ்சத்தை இந்த இலவச உணவு விநியோகம் பெரிதும் ஈடுசெய்தது. நெடுந்தீவிலுள்ள ஆறாயிரம் மக்களுக்கும் வழங்கப்பட்டன (71 ரூ)

# கண்டாவளை, கொழும்பு தினசரி லொறி சேவைகள்

கண்டாவளையில் இருந்து கொழும்பிற்கும் கொழும்பிலிருந்து கண்டாவளைக்கும் இடையில் தினமும் பத்து லொறிகள் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களை எடுத்துச் செல்கின்றன.

இதனால் வவுனியா, புதுக்குடியிருப்பு பகுதிக்குச் செல்லும் வட பகுதி சைக்கிள் வியாபாரிகள் தற்போது கண்டாவளைக்கு வருகின்றனர்.

அரிசி, சீனி, சைக்கிள் ரியூப், சோப் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இங்கு தாராளமாகக் கட்டுப்பாட்டு விலைக்குக் கிடைக்கின்றன.

இதேபோல வெங்காயம், கருவாடு, வாழைக்குலை என்பனவும் கொழும்பிற்கு இங்கிருந்து செல்கின்றன.

அத்தியாவசியத் தேவைக்கு கொழும்பு செல்லும் பயணிகளும் இங்கிருந்து லொறிகளில் செல்வதைக் காணமுடிகிறது. (43 ரூ)

## மன்னாரில் வங்கிகள் இயங்குகின்றன

மன்னாரில் இலங்கை வங்கியும், மக்கள் வங்கியும், சணிவிலேஜில் இயங்கி வருகின்றன. இவை முன்னர் மன்னார் நகரில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் ஹற்றன் தேசிய வங்கி பழைய இடத்திலேயே இயங்கிவருகின்றது.

இந்த மூன்று வங்கிகளும் குறிப்பிட்ட மூன்று நாட்களுக்கு மட்டுமே இயங்குகின்றன. (17கி)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 23-09-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.